தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: **06.11.2026**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

கார்பன் வேளாண்மையை மேம்படுத்துவதற்கான காலநிலை மாற்றத்தைத் தாங்கும் மண் வள மேலாண்மை உத்திகள் குறித்த மண்டலப் பயிலரங்கின் தொடக்க விழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், இயற்கை வள மேலாண்மை இயக்ககத்தின் கீழ் இயங்கும் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையில், "கரிம வேளாண்மையை மேம்படுத்துவதற்கான காலநிலை மாற்றத்தைத் தாங்கும் மண் வள மேலாண்மை உத்திகள்" என்ற தலைப்பிலான மண்டலப் பயிலரங்கின் தொடக்க விழா 05.11.2026 அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையைச் சார்ந்த வேளாண்மை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர்களுக்காக இப்பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது. காலநிலை மாற்றத்தைத் தாங்கும் மண் வள மேலாண்மை நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல், மண்ணின் நலத்தை மேம்படுத்துவதிலும், நிலையான வேளாண் வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் கரிம வேளாண்மையின் பங்கு குறித்த அறிவை மேம்படுத்துதல் ஆகியவை இப்பயிலரங்கின் முக்கிய நோக்கங்களாகும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் இரா. கு. காளீஸ்வரி அவர்கள் வரவேற்புரை வழங்கி, பயிலரங்கின் நோக்கங்கள் மற்றும் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். மேலும், வேளாண்மை மற்றும் இயற்கை வள மேலாண்மையில் தற்போது உருவாகி வரும் சவால்களை எதிர்கொள்வதில் இத்தகைய பயிலரங்குகள் வகிக்கும் பங்கு குறித்தும் விளக்கினார்.

கோயம்புத்தூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திருமதி எம். தமிழ்ச்செல்வி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அதில், பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன், மண்ணில் அங்ககக் கரிம அளவை அதிகரிக்கும் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரவலாகக் கொண்டு செல்லுமாறு பயிலரங்கில் பங்கேற்ற அலுவலர்களைக் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், இயற்கை வள மேலாண்மை இயக்குநர் முனைவர் சு. கார்த்திகேயன் அவர்கள் சிறப்புரையாற்றினார். மண்ணின் நலத்தைப் பேணிப் பாதுகாப்பதில் மண்ணின் கரிமக் கார்பன் அளவை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மேலும், கரிம வேளாண்மைத் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே ஊக்குவிப்பதுடன், கரிம வர்த்தகத்தின் மூலம் விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

பயிலரங்கின் ஒருங்கிணைப்புச் செயலரும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறைப் பேராசிரியருமான முனைவர் கா. சத்தியபாமா அவர்கள் நன்றியுரை வழங்கினார். இப்பயிலரங்கில் தமிழ்நாடு அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையைச் சார்ந்த மொத்தம் 72 அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்